**செய்தி வெளியீடு எண் : 2031** **நாள் : 15.11.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

# டிட்கோ நிறுவனத்தின் 2021–2022–ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத்தொகை 150 கோடி ரூபாய் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (15.11.2022) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 2021–22ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 150 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவன வரலாற்றிலேயே மிக அதிகமான பங்கு ஈவுத்தொகை வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

1965–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு அரசின் பிரதான தொழிற்துறை மேம்பாட்டு முகமையான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து பெரும் முதலீடுகளை ஈர்த்து, மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நடுத்தர மற்றும் பெரிய தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களை நிறுவி, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் பெருந்தட திட்டங்களை செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாகவும் டிட்கோ செயல்படுகிறது.

கடந்த 57 ஆண்டுகளில் இந்நிறுவனம் இரும்பு மற்றும் எஃகு பொருட்கள், உரங்கள், கெமிக்கல்ஸ், பெட்ரோ கெமிக்கல்ஸ், இன்ஜினியரிங், ஆட்டோ கூறுகள், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல், தோல், வேதியியல் மருந்துகள், தோட்டக்கலை, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பம், உள்கட்டமைப்பு / தொழிற்துறை பூங்காக்கள் உட்பட பல்வேறு துறைகளில் 100க்கும் மேற்பட்ட திட்டங்களை ஊக்குவித்ததுடன், விவசாய ஏற்றுமதிப் பகுதிகள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்களையும் உருவாக்கியுள்ளது. இவற்றுள் குறிப்பிடத் தகுந்த சில நிறுவனங்களான டைட்டன், டைடல் பார்க், எல் & டி ஷிப் பில்டிங், மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி,

ஸ்பிக், அசெண்டாஸ் ஐடி பார்க், ராமானுஜம் ஐடி பார்க், தமிழ்நாடு பெட்ரோப்ரோடக்ட்ஸ், டான்பாஃக், டான்ப்ளோரா, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சென்னை வர்த்தக மையம் ஆகியவையும் அடங்கும். மேலும், பாதுகாப்புத் தொழில் பெருந்தடம் ஆகிய திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாகவும் டிட்கோ செயல்படுகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. 2021-22 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனமானது வரிக்கு பிந்தைய இலாபமாக ரூபாய் 252,17,49,676/- ஈட்டியுள்ளது.

2021-22 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிகர இலாபத்தில் 59.48% பங்கு ஈவுத்தொகை 150 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசிற்கு செலுத்துவதாக 23.09.2022 அன்று நடைபெற்ற 57வது வருடாந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் டிட்கோ அறிவித்தது. அதன்படி, மேற்படி பங்கு ஈவுத்தொகையான 150 கோடி ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச, கிருஷ்ணன், இ.ஆ.ப மற்றும் டிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப ஆகியோர் கலந்து கொண்டனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in